**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், எம்.எ., பி.எல்.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2025–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 09ம் நாள் புதன்கிழமை

**IA.No.02/2024 in OS.No.125/2023**

**TNTM 03000339/2023**

1. ராஜேந்திரன்

2. பாபு

3. கார்த்திக் ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிராக/

என். பலராமன் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக 25.06.2025 அன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.அபிராமன்,B.Sc.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.சந்திரசேகரன்,B.A.,B.L., R.கணேசன்,B.A.,LLB ஆகியோர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

இவ்வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வாதி தரப்பு சாட்சி வா.சா.1ஐ மேற்கொண்டு குறுக்கு விசாரணை செய்திட ஏதுவாக வா.சா.1ஐ மீண்டும் அழைக்க உத்தரவு பிறப்பிக்க கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 18 விதி 17ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **1ம் மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர் இம்னுவின் 1ம் மனுதாரர் ஆவேன். அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவார். 2, 3 மனுதாரர்கள் மனுதாரரின் மகன்கள் அவர்களுக்கும் சேர்த்து இந்த அபிடவிட்டை தாக்கல் செய்கிறார். வாதி தனக்கு எதிராக கிரய அக்ரிமெண்ட் தாவா

தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் மனுதாரர் தரப்பில் மிக முக்கியமான விவரங்கள் குறித்து வா.த.சா.1யிடம் மேற்கொண்டு குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளது. மேற்குறிப்பிட்ட முக்கிய விவரங்கள் குறித்து மேற்கொண்டு வா.த.சா1ஐ குறுக்கு விசாரணை செய்யாதபட்சத்தில் பிரதிவாதி தரப்பு வழக்கை முழுமையாக முடிவு செய்திட இயலாது. அவ்வாறில்லையெனில் பிரதிவாதிக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும், ஈடு செய்ய இயலாத பேரிழப்பும் ஏற்படும், மேலும் பெரும் அநீதி இழைக்கப்பட்டுவிடும். வாதியை மீண்டும் அழைத்து மேற்கொண்டு குறுக்கு விசாரணை செய்தால் வாதிக்கு எந்த கஷ்டமும் இல்லை. மேற்கொண்டு வா.த.சா–1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய ஏதுவாக இவ்வழக்கில் வா.த.சா.1 சாட்சியத்தை விசாரணையை திறக்க வேண்டியது அவசியமும், நியாயமுமாகிறது. இல்லாவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும், ஈடுசெய்ய இயலாத இழப்பும் ஏற்படும். இந்த மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/வாதிக்கு எந்த குந்தகமும், பாதிப்பும் ஏற்படாது என மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

3**. <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரை சுருக்கம்:–</u>**

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் மனுவில் கூறியுள்ள அனைத்து சங்கதிகளையும் எதிர்மனுதாரர் மறுக்கிறார். வா.த.சா.1 சாட்சி மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. வாதி தனக்கு எதிராக கிரய அக்ரிமென்ட் தாவா தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்படி வழக்கில் தனது தரப்பில் மிக முக்கியமான "தரவுகள்" விவரங்கள் குறித்து வாத.சா.1யிடம் மேற்கொண்டு குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளது என்று மனு தாக்கல் செய்துள்ளார். என்ன முக்கியமான விவரங்கள் குறித்து குறுக்கு விசாரணை செய்யவேண்டும் என்ற விவரம் மனுவில் கூறவில்லை.

4. வா.சா.2 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் இந்த மனு விடுப்பட்ட சங்கதிகளை நிரப்பவேண்டிய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உரிய காரணங்கள் குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ள இம்மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறியுள்ளனர்.

5. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

6. மனுதாரர்கள், எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம் ஆவண சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை.

7. <u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இந்த மனுவில் மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ள விவரம் வாதி எங்களுக்கு எதிராக கிரய ஒப்பந்தம் தொடர்பான வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி தரப்பு சாட்சியான வா.சா.1ஐ எங்களது தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு குறுக்கு விசாரணை செய்யும்போது மிக முக்கியமான விவரங்கள் குறித்து குறுக்கு விசாரணை செய்யாமல் விடுபட்டுள்ளது. எனவே முக்கிய விவரங்கள் குறித்து மேற்கொண்டு வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்யவேண்டி இருப்பதால் இம்மனுவை அனுமதிக்கவேண்டும். வா.சா.1ஐ மேலும் குறுக்கு விசாரணை செய்யாவிட்டால் பிரதிவாதி தரப்பு வழக்கை முழுமையாக முடிவு செய்திட இயலாது. இம்மனுவை அனுமதிக்காவிட்டால் பிரதிவாதிக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஈடு செய்ய இயலாத பேரிழப்பும் ஏற்படும். மேலும் பெரும் அநீதி ஏற்பட்டு விடும். எனவே வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய மீண்டும் அழைக்க தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென்று மனு தாக்கல் செய்து வாதம் செய்யப்பட்டது.

8. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வா.சா.1ஐ முழுமையான அளவில் குறுக்கு விசாரணை செய்துள்ளார்கள். இம்மனுவில் முக்கிய விவரங்கள் குறித்து வா.சா.1ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய அழைக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எந்த சங்கதி குறித்து வா.சா.1னிடம் பிரதிவாதிகள் தரப்பில் கேள்விகள் கேட்கப்படாமல் விடுபட்டுள்ளது என்ற விவரமும் என்ன முக்கிய விவரம் குறித்து வா.சா.1னிடம் பிரதிவாதிகள் கேள்வி கேட்க இருக்கிறார்கள் என்ற விவரம் எதுவும் இம்மனுவில் குறிப்பிடப்படவில்லை. என்ன காரணத்திற்காக வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய மீண்டும் அழைக்கப்பட

வேண்டும் என்ற காரணம் குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்வாதம் செய்யப்பட்டது.

9. மனுதாரர் தரப்பில் வாதம் செய்யும்போது இந்த மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் புதிய வழக்கறிஞர் நியமனம் செய்துள்ளதாகவும் வா.சா.1னிடம் சில முக்கியமான கேள்விகள் கேட்கப்படாமல் விடுபட்டுள்ளது. எனவே வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய மீண்டும் அழைக்க வேண்டி அவசியம் உள்ளது. எனவே இந்த மனுவை அனுமதிக்க வேண்டும் என்று வாதம் செய்யப்பட்டது.

10. வாதி/எதிர்மனுதாரர் தரப்பில் வாதம் செய்யும்போது வா.சா.1ஐ முழுமையான அளவில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்துள்ளார்கள். வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.2ன் சாட்சியையும் முழுமையான முறையில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. என்ன விதமான சங்கதிகள் குறித்து வா.சா.1னிடம் கேள்வி கேட்க வேண்டும் என்ற விவரம் எதுவும் இல்லை. விடுபட்ட சங்கதிகளை நிரப்பும் விதமாக(to fill up the lacuna) வா.சா.1ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யவேண்டி தாக்கல் செய்துள்ள இம்மானு ஏற்புடையதல்ல. மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்வாதம் செய்யப்பட்டது.

11. வாதியான வா.சா1ஐ பிரதிவாதிகள் தரப்பில் கடந்த 13.07.2022 அன்று பகுதி அளவு குறுக்கு விசாரணை செய்யப்பட்டு மீண்டும் 20.07.2022ம் தேதி குறுக்கு விசாரணை தொடரப்பட்டு, முழுமையான அளவில் குறுக்கு விசாரணை செய்து முடித்து விட்டார்கள் என்பது தெரிய வருகிறது. வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.2ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்துள்ளார்கள் என்பது தெரிய வருகிறது. இந்த மனுவை வா.சா.1ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி தாக்கல் செய்துள்ளார்கள். என்ன சங்கதிகள் குறித்து வா.சா.1ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்ற விவரம் இம்மனுவில் குறிப்பிடவில்லை. எந்த விவரம் சம்பந்தமாக வா.சா.1னிடம் மேலும் கேள்விகள் கேட்கப்பட வேண்டும் என்ற சரியான விவரம் குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்கும் வகையில் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.. செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 09ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S
Digitally signed by BASKARAN S
Date: 2025.07.09 17:49:30 +0530

சார்பு நீதிபதி,
ஆரணி.

<u>**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–**</u> இல்லை

<u>**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:–**</u> இல்லை

BASKARAN S
Digitally signed by BASKARAN S
Date: 2025.07.09 17:49:41 +0530

சார்பு நீதிபதி,
ஆரணி.